## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

2026 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 24-ஆம் நாள், செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 12-ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.ம.எண். 02/2025 ன் அ.வ.எண்.12/2023

பிரான்சிஸ் சேவியர் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

மகாலெட்சுமி ..... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனுவானது 10.02.2026 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. அமுதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V.முத்துகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

### உத்தரவு

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(3) பிரிவு 151-ன்கீழ் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டி பரிகாரம் கேட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.24 13:31:46 +0530

1. **மனுவின் சுருக்கம்**:

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது முதல் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அசல் வழக்கு தாக்கல் செய்த சமயம் வழக்கிற்கு தேவையான முக்கிய ஆவணங்கள் கைவசம் இல்லாததால் இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை. அந்த ஆவணங்கள் யாவும் தற்போதுதான் கிடைத்தது. எனவே, மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**:

மனுதாரரது மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவின் ஆவண விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் ஆகும். மேலும், ஆவண விபரம் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. அசல் வழக்கில் தேவையற்ற குழப்பத்தை உருவாக்க வேண்டியே இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் இம்மனுவானது அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.24 13:31:53 +0530

மனுதாரர் தரப்பில், அசல் வழக்கு தாக்கல் செய்த சமயம் வழக்கிற்கு தேவையான முக்கிய ஆவணங்கள் கைவசம் இல்லாததால் இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை. அந்த ஆவணங்கள் யாவும் தற்போதுதான் கிடைத்தது. எனவே, மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என கூறியுள்ளார்.

அசல் வழக்கானது நஷ்ட ஈடு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதால் மனுதாரருக்கு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரர் எந்தவிதமான பாதிப்புக்கும் உள்ளாகமாட்டார். மேலும், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் வருடம் பிப்ரவரி மாதம் 24-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.24 13:32:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.24 13:32:05 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

மு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.02/2025 இன்

அ.வ.எண்.12/2023

தேதி.24.02.2026